1978 செப்டம்பர் 8]

திரு. மு. அம்பிகாபதி: முக்கியமான கேள்வி, ஒரு துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணியைப் பாருங்கள். இது வரை எத்தனை கேள்விகள் முடிந்திருக்கின்றன என்றும் பாருங்கள். ஒரு மணி நேரத்திற்குள் கேள்விகளை முடிக்க வேண்டும். அடுத்த கேள்வி என்று சொல்லிய பிறகு திரு. அம்பிகாபதி அவர்கள் தயவு செய்து அமர வேண்டும்.

மணப்பாடு கிராமத்தில் பழங்காலச் சுரங்கம்.

*வினா எண். 86—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்செந்தூர் அருகில் உள்ள மணப்பாடு என்னும் கிராமத்தில் அவ்வூர் மக்களால் பழங்காலச் சுரங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி மேற்கொண்டு தகவல்களை அறிய தொல் பொருள் துறை என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) சுரங்கம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

வேலஞ்சேரியில் எடுக்கப்பட்ட பழங்கால விக்கிரகங்கள்

*வினா எண் 87—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்த ஆண்டு (1977) செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணிகைக்கு அருகேயுள்ள வேலஞ்சேரி கிராமத்தில் செப்பு பட்டயம் விக்கிரகங்கள் ஆகியவை பூமியின் கீழிருந்து தோண்டி எடுக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது?

(இ) அதனை அரசு கைப்பற்றியதா அல்லது அங்குள்ள கோயிலில் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) அவைகள் எந்தக் காலத்தனவை என்பது தெரியவில்லை. ஆனால் சுமார் 300 ஆண்டுகளாக மண்ணில் புதைபட்டு இருப்பதாக அறியப்படுகிறது.

(இ) தற்போது சிலைகள் அவ்வூர் மக்கள் நிறுவியுள்ள திருப்பணிக் குழுவின் வசம் இருந்து வருகிறது.